# பத்தாம் வகுப்பு


# இயல் 1

# தமிழ்ச்சொல் வளம்

## ஆசிரியர்

தேவநேயப் பாவாணர்

# தேவநேயப் பாவாணர்



பெயர் : தேவ நேயப் பாவாணர்

பெற்றோர் : ஞானமுத்து – பரிபூரணம் அம்மையார்

ஊர் : திருநெல்வேலி மாவட்டம் – சங்கரன் கோவில்

காலம் :7.2.1902 – 15.1.1981

பணி : தமிழாசிரியர், எழுத்தாளர், மொழியாராய்ச்சியாளர்

நூல்கள் : தமிழ் வரலாறு, தமிழர் திருமணம், தமிழர் மதம், தமிழர் வரலாறு......

# தமிழ் சொல்வளம்

- தமிழ் மொழி சொல்வளத்தில் சிறந்தது.
- தமிழில் உள்ள ஒரு பொருள் பல சொல்வளம் பிற திராவிட மொழிகளில் இல்லை.
- தமிழில் மட்டுமல்லாது பிற திராவிட மொழிகளில் உள்ள சொற்களும் தமிழில் காணப்படுகின்றன.
- சான்றாக பயிர்வகை (தாவர வகை) சொற்களைக் காணலாம்.



# தாவரங்களின் அடிப்பகுதி

| | |
|---|---|
| தாள்: நெல், கேழ்வரகு |  |
| தண்டு: கீரை, வாழை |  |
| கோல்: நெட்டி, மிளகாய் |  |
| தூறு: குத்துச்செடி, புதர் |  |

| | |
|---|---|
| தட்டு(அ) தட்டை: கம்பு, சோளம் |  |
| கழி: கரும்பு |  |
| கழை: மூங்கில் |  |
| அடி: புளி, வேம்பு |  |

# கிளைப்பிரிவுகள்

கவை

↓

கிளை

↓

சினை

↓

போத்து

↓

குச்சு

↓

இணுக்கு



# காய்ந்த கிளைப்பிரிவுகள்

- சுள்ளி – காய்ந்த குச்சு
- விறகு – காய்ந்த சிறுகிளை
- வெங்கழி – காய்ந்த கழி
- கட்டை – காய்ந்த கொம்பும், கவையும், அடியும்.



# இலை வகைகள்



இலை

புளி,வேம்பு



தோகை

சோளம், கரும்பு



தாள்

நெல், புல்



ஓலை

தென்னை, பனை

- காய்ந்த இலை – சருகு
- காய்ந்த தாள், தோகை - சண்டு

# தாவரத்தின் நுனிப்பகுதி (கொழுந்து)



**தளிர் (துளிர்)**

நெல், புல்



**கொழுந்து (முறி)**

புளி,வேம்பு



**குருத்து**

தென்னை,
பனை, சோளம்



**கொழுந்தாடை**

கரும்பு

# பூ நிலைகள்

- அரும்பு –



- போது –



- மலர் -



- வீ – விழுந்த பூ



- செம்மல் – வாடிய பூ



# பிஞ்சு வகைகள்





| பிஞ்சு பெயர் | தாவரம் |
|---|---|
| வடு | மா |
| மூசு | பலா |
| கவ்வை | எள் |
| குரும்பை | தென்னை, பனை - இளம்பிஞ்சு |
| இளநீர் | தென்னை |
| நுழாய் | பாக்கு |
| கருக்கல் | நெல் |
| கச்சல் | வாழை |





# குலை வகைகள்



கொத்து
அவரை, துவரை



கதிர்
சோளம், கேழ்வரகு



குலை
முந்திரி, திராட்சை



அலகு
நெல், தினை



தார்
வாழை



சீப்பு
வாழைத் தாரின் பகுதி

# கெட்டுப் போன காய் கனிகள்

| பெயர் | விளக்கம் |
|---|---|
| சூம்பல் | சுருங்கிய காய் |
| சிவியல் | சுருங்கிய பழம் |
| சொத்தை | பூச்சி அறித்த காய், கனி |
| வெம்பல் | சூட்டினால் பழுத்த பிஞ்சு |
| அளியல் | குளுகுளுத்த பழம் |
| அழுகல் | குளுகுளுத்து நாறிய பழம் |
| சொண்டு | பதராய் போன மிளகாய் |
| கோட்டான் காய் | கோட்டானால் பாதிக்கப்பட்டது |
| தேரைக்காய் | தேரையால் பாதிக்கப்பட்டது |
| அல்லிக்காய் | தேரையால் பாதிக்கப்பட்ட தேங்காய் |
| ஒல்லிக்காய் | கெட்டுப்போன தேங்காய் |

# பழத்தோல் வகைகள்



- தொலி: மெல்லிய தோல்
- தோல்: திண்ணமானது
- தோடு: வன்மையானது
- ஓடு: மிக வன்மையானது

- குடுக்கை: சுரையின் ஓடு
- மட்டை: தேங்காய்
- உமி: நெல், கம்பு
- கொம்மை: வரகு, கேழ்வரகு














shutterstock.com • 1074772469

# மணி வகைகள்



**கூலம்** – நெல் முதலிய தானியங்கள்,

**பயறு** – அவரை, உளுந்து,

**கடலை** – வேர்கடலை, சுண்டல்,

**விதை** – கத்திரி, மிளகாய்,


**காழ்** – புளி, காஞ்சிரை ( நச்சு மரம்),

**முத்து** – வேம்பு, ஆமணக்கு,

**கொட்டை** – மா, பனை,

**தேங்காய்** – தென்னை விதை

**முதிரை** – அவரை, துவரை



# இளம்பயிர் வகைகள்

நாற்று – நெல், கத்திரி

கன்று – மா, புளி, வாழை

குருத்து – வாழையின் இளநிலை

பிள்ளை – தென்னை

குட்டி – விளாவின் இளநிலை

மடலி – பனையின் இளநிலை

பைங்கூழ் – நெல், சோளம் பசும்பயிர்



# கருத்துத் தொகுப்பு

- தமிழ் – சொல்வளமுடையது
- தமிழ் நாடு – பொருள் வளமுடையது
- ஒரு மொழி பொதுமக்களாலும், அதன் இலக்கியம் புல மக்களாலும் அமைகிறது.
- தமிழ் பொதுமக்கள் உயர்ந்த பகுத்தறிவு உடையவர்கள்.
- சான்று –தாள், இலை, தோகை - Leaf
- விளைபொருட்களின் வகைகள் –தமிழ் நாட்டின் வளம்.
- ஒரு நாட்டின் வளத்திற்குத் தக்கபடி , அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கம் அமையும்.
- நாட்டின் தனிப்பெரும் வளத்தினாலேயே, பண்டைத் தமிழ் மக்கள் தனிப்பெரும் நாகரிகத்தை உடையவராக இருந்தனர்.